<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

எம்.சி.ஓ.பி. எண். 53/2022

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | வெங்கடேசன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | பெருமாள் |
| வயது | .. | 29 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | தவசி |
| வட்டம் | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

மனுவில் மனுதாரர். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.1, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.த.சா.ஆ.2, வாகன பதிவுச்சான்று நகல் ம.த.சா.ஆ.3, வாகன காப்பீட்டு சான்று நகல் ம.த.சா.ஆ.4, ஓட்டுநர் உரிமம் நகல் ம.த.சா.ஆ.5, விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று நகல் ம.த.சா.ஆ.6, மனுதாரர் ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.7, இறுதி அறிக்கை நகல் ம.த.சா.ஆ.8, டிஸ்சார்ஜ் சம்மரி நகல் ம.த.சா.ஆ.9, பேருந்தின் பெர்மிட் நகல் ம.த.சா.ஆ.10.